805

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை—7 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத, ஆடி 22—7—55 தளிர்-42

OFFICE OF THE R... 1955 ... MADRAS

805/577

## குருகுலத்தின் குறிக்கோள்:

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## இயற்கைப் பாதுகாப்பு

வாழ்க்கைக்குப் பொதுவாக இரண்டு முன்னேற்றப்படிகள் அடிப்படையில் உள்ளன. அவைதாம் கல்வியும் ஒழுக்கமும்! உயிரறிவு இவ்விரண்டிலும் பயின்று பண்படவேண்டும். இல்லையானால் வாழ்க்கையில் உயர்வு இல்லை.

கல்விக்கு ஓதும் நூல்களும் ஒழுக்கத்திற்குக் குடிப்பிறப்பும் உதவியாய் இருப்பன; இவற்றில் மிகவும் முக்கியமானது, கல்வியைவிட ஒழுக்கமே யாகும்.

கற்ற கல்வி ஒருகால் மறந்தாலும் மீண்டும் பெறலாகும், ஒழுக்கத்தை ஒருகால் இழந்தாலும் இழந்ததேயாம். அவ்வொழுக்கத்திற்கு உதவியாய் இருந்த குடிப் பிறப்பின் மேன்மையும் அதனோடு அற்றுப் போம்; இதற்குக் காரணங்கள் உண்டு.

ஓதும் நூல்கள் சட்டைப் போர்வை போன்றது; பிறப்பொழுக்கம் என்பது உடம்பாகிய தோற்போர்வை போன்றது. சட்டை கழற்றவும் மீண்டும் அணியவும் உரியது. ஆனால் உடம்பாகிய போர்வை அத்தகையதன்று. உடம்பை இழந்தால் இழந்ததுதான். உடம்பு எப்படி பிறப்பால் நேர்கின்றதோ அதுபோல ஒழுக்கமும் குடிப்பிறப்பால் அமைந்து பிறப்பொழுக்கம் எனப் பெயர் பெறுகின்றது. உடம்பு இயற்கை அரணாதல் போல ஒழுக்கமும் உயிர்க்கு இயற்கை அரணாகும்; மேல் ஆடை செயற்கைப் பாதுகாப்பாவதுபோல நூற் கல்வியும் செயற்கைப் பாதுகாப்பாகும்.

கல்வி மனஅறிவைப் பற்றி நிகழ்வது; ஆனால், ஒழுக்கமோ உயிர் உணர்வைப் பற்றி நிகழும். ஆதலால், ஒழுக்கமாகிய இயற்கைப் பாதுகாப்பு அற்றால் வாழ்க்கையே நிலைகுலைந்து விடுகின்றது. இயல்பாகவே உயர்ந்த குடிப்பிறப்பில் தோன்றும் சிறப்புடையோர்க்கு இவ் ஒழுக்கப் பாதுகாப்பு எவ்வளவோ முதன்மை என்பது இதனால் தெளியப் பெறும்.

**மறப்பினும் ஒத்துக் கொளலாகும் பார்ப்பான்**
**பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்.**

ஒத்து மறப்பினும் கொளலாகும்—ஓதும் நூல்களை ஒருகால் மறந்துவிட்டாலும் மீண்டும் ஓதிக்கொள்ளுதல் ஆகும்; பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்—பார்ப்பனன் தனது குடித்தன்மை ஒருகால் குறைந்தால் அதோடு அவன் இழிந்தவன் ஆய்விடுவான்.

மறப்பினும் என்றார், பாராயணங்களும் இடையில் வழுவலாகாது என்றற்கு. மறத்தலால் குடிபிறப்பின் பெருமை சிறிது குறையுமானாலும் நிறைவு செய்துகொள்ள இடம் உண்டு என்று தேற்றுவார், 'கொளலாகும்' என்றார்.

பிறப்பொழுக்கம் என்பது குடிப்பிறப்பின் பழக்கத்தால் வந்த ஒழுக்கச் சிறப்பு; 'குன்றக் கெடும்' என்னும் குறள், ஒருகால் குறைய அடியோடு கெட்டுவிடும் என்பது உணர்த்தும்.

குறைந்தால் கெடுமுகம் செல்லுமல்லது வளர் முகம் செல்லாது என்று தெரிதலால், ஒழுக்கத்தை விழிப்பாகக் காத்துக் கொள்ள வேண்டிய கடமைப்பாட்டின் அழுத்தம் இதனால் நன்கு தெளியப்படும்; 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்' என ஆசிரியர் முன்பும் தெரிவித்தமை நினைவு கூர்க.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |

ஆயுள்—

| | | | | |
|---|---|---|---|---|
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு


| இலை | மன்மத, ஆடி, | தளிர் |
|---|---|---|
| 7 | 22-7-55 வெள்ளி. | 42 |


# திருவடிக் கோயில்

முழுமுதல்வன் "திருவடி"க்குத் "திருக்கோயில்" எழுப்புவதென்றால் புதியதோர் பூவுலகையும், மற்றுள்ள உலகங்கள் அனைத்தையும் எழுப்புவதுபோலாகும்.

அப்படி எழுப்ப யாம் காணும் போது, எப்படி ஆண்டவன் எல்லாவற்றினுள்ளும் இருக்கிறானோ, அதேபோல் யாமும் அவனருகே இருக்கக் காண்கிறோம். அக் காட்சியில் உலகங்கள் அனைத்தும் (கணக்கிட முடியவில்லை), எப்படி எப்படியெல்லாம் அவனை வலம் வருவது என்றுங் கூடத் தெரியாமல், சிந்தனையையும் தாண்டித் தங்கள் தங்களையே வலம் வந்துகொண்டிருக்கின்றன.

இவை யெல்லாம் புன்முறுவலுடன் இருக்கை கொண்டு பார்த்துக்கொண்டும், பாதுகாத்துக் கொண்டும், மௌன நிலையில் கண்ணோக்கிக் காண்கிறான். அத் திருக் கண்ணோக்கில் அனைத்து உலகங்களின் தன்மைகளையும் நிலைகளையும் இயைபுகளையும் உணர்வான்போல் உயிர்களும் உள்ளம் களிமிகக் கொள்ளச் சிந்தனைகள் யாவும் எங்குச் சென்றனவோ என்றுகூடத் தெரியாமல், சிந்தனை யென்று ஒன்று உண்டா என்றுகூட ஐயம் எற்படும் வண்ணம் உள்ளம் மிளிர்ந்து, தளிர்க்கிறது.

இறைவன் நிலைக்கு ஆன்மா எகும் நிலையில் அநேகவித மாயைகள் குறுக்கிடுகின்றன. அதனை முதலில் தவிடுபொடியாக்கித் தவிர்க்கும் வண்ணம் திருவடிக் கோயிலுக்குச் சுற்றும் அரண் அமைத்தல் வேண்டும். அவ்வரண் (மதில் சுவர்) மற்ற ஆலயங்களுக்ககு அமைத்துள்ளதுபோல் அல்லாமல் சற்று நீண்ட உருண்டையுருவில் அமைதல் நல்லது. அம் மாதிரி மூன்று அரண் அமைத்தல் தக்கது. அவ்வரணங்களில் யாதோர் எழுத்து வடிவோ, சித்திரங்களோ, எனைக் கலை வடிவுகளோ காணக்கூடாது.

அவ்வரண்களைக் காண்போர்க்குத் தன்னிழல், (தன் ஒளி) தன் எழில் வடிவுதான் விளங்கல் வேண்டும். இயற்கை காண வந்தால், அவ்வரணில் தன்னைத்தான் காணல் வேண்டும். ஒளி மின்னல் தன்னை மின்னிக்கொண்டு காணவந்தாலும், அவ்வரண் சுவரிலே தன் மினொளியைத்தான் காணல் வேண்டும்.

எதோ தப்பித் தவறி விழித்து யாரோ ஓர் அடியவர் எக்கங் கொண்டு திடீரென்று வழி தவறி வந்துவிட்டாரென்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது, தன்னிழல் அம் மதிற்சுவரில் விளங்கக் கண்டு மெய்யுணர்வு பெறுதல் வேண்டும். அந்நிலையில் அம் மதிற் சுவர் அமையவேண்டும்.

எதற்கு இவ்வாறு விளக்கம் எனின், ஆண்டவன் திருவடியை அரணமாக வளைத்துக்கொண்ட அம் மதில், ஆன்மாக்கள் யாவும் தன் அருகில் வந்த அளவில் தத்தம் இயல் வண்ணம் (சொரூபம்) விளங்கித் தன்னை யறிந்து தம் தலைவனை அறியுமாறு செலுத்தும் தகுதியுடையதாதல் வேண்டும் என்பதற்கேயாம்.

முழு நீளத்தில் 1/9 ல் "திருவடிக்குப் பீடம் அமைத்தல் வேண்டும். அவை எட்டு அடுக்குகளைக் கொண்டு வளைவாக உயர்ந்திருத்தல் வேண்டும். எட்டாவது, அடுக்கின் மேல் ஓங்கார வடிவில் "திருவடியை" எழுந்தருளச் செய்யவேண்டும்.

கோயிலின் கூடமும் பிரணவ ரூபமாகவே மழைக் கால வானவில் போல அமைதல் நல்லது. திருவடிக் கோயிலின் சிகரத்தில் கலசத்தின் மேலும் பிரணவம் காட்சியளிக்கும் வண்ணம் ஒளி திகழ்தல் வேண்டும்.

எதோ நம் கடன் பணிசெய்து கிடப்பது தானே. ஆகையால் நாம் பணி செய்ய உள்ளம் கொள்வோம். அவனுக்கும் ஓர் கடன உள்ளதே, அதை அவன் செய்ய நம்மை தாங்கிக் கொள்ளத் திருவுளம் கொள்ளட்டும்.

ஓ. தூ


Telegrams: "RAMBROS'

N.Ramu Bros,

GENERAL HARDWARE
MERCHANTS

AVANASHI ROAD,
COIMBATORE.

# ஒரு பாட்டு

(முன் தொடர்ச்சி)

ஒக்கூர் மாசாத்தியார் ஒரு பெண்! அவருக்கு இயற்கையாகவே பூக்களிடத்து நாட்டம் அதிகம். அவர் ஒரு புலவர்; எனவே பூக்களில் ஈடுபடுதலும் அதன் வனப்பிலே மனதைப் பறிகொடுத்து ஆழ்ந்து தோய்ந்து விடுதலுமாகிற குணம் பெற்றவராயிருந்தால் வியப்பேது. முல்லை மலரைக் கண்டார் ஈடுபட்டார்; அகத்திலே எழுச்சி; அது விளைவாயிற்று பாட்டுப் பிறந்தது.

"முல்லை. ஆம் அழகான முல்லை; வெண்மையான முல்லை. பெண்கள் விரும்பித் தலையில் அணிந்து கொள்ளுமாறு அழகு படைத்த முல்லை" என்றே முல்லையின் குணநலன்களைப் பாராட்டிப் பாடிச் செல்லவில்லை அவர்.

முல்லையைக் கண்டார் அதே நேரத்தில் தான் தங்கியிருந்த வீட்டுக்குப் பக்கலில் முன்னாள் இரவு இரண்டு பெண்கள் பேசிக் கொண்டிருந்தவைகளை அவர்தம் நினைவின் உதவியால் கண்டார்.

"இல்லறமே நல்லறம் என்று கூறி அவர் என்னை மணந்தார். வாழ்க்கையில் ஈடுபட்டோம் என்றும் என்னை விட்டுப் பிரிவதில்லை என்றார். இன்றோ அன்று அவர் சொன்ன அச்சொல்லை மறந்து "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை பிறர்க்கு" என்ற முதுமொழியைக் கூறிச் செல்வம் திரட்ட என்னைப் பிரிந்து சென்றுவிட்டாரே. அப்படிச் சென்றவர் என்னை மறந்ததைப் பற்றி நான் கவலைப்படவில்லை தான் சொன்ன சொல்லையும் செய்த உறுதியும் மறந்து அங்கேயே தங்கிவிட்டாரே என்று தான் கவல்கின்றேன். 'மழை பெய்யும் காலத்தில் எப்படியும் திரும்பிவிடுவேன்' என்று கூறினாரே. மழைபெய்து விட்டதே தோழி அவர் இன்னும் வந்தாரில்லையே, என் செய்வேன்" என்று தன் தோழியிடம் ஒரு தலைவி தன் ஆற்றாமையைப் புலப்படுத்திக்கொண்டிருந்தாள்.

இவ்வுரைகளைத்தான் புலவர் கேட்டிருந்தார். தலைவன் தலைவியைவிட்டுப் பிரிந்தான். கார்ப் பருவத் தொடக்கத்தில் திரும்பி வருவேன் என்று உறுதி கூறிச் சென்றான் கார்ப் பருவம் வந்துவிட்டது. தலைவனோ வீடு நோக்கித் திரும்பவில்லை. தலைவி வருந்துகிறாள்; தன் வருத்தத்தைத் தாங்காது தோழியிடம் வெளிப்படுத்துகிறாள் இது செய்தி.

காட்டுவழியாகப்புலவர் சென்றார். மழைத் துளிகளைப் பெற்ற முல்லை முகைகள் விரிந்து கொடிகளை அணி செய்துகொண்டிருந்தன. இது காட்சி.

செய்தியையும் காட்சியையும் புலவர் இணைத்தார். பூவிலிருந்த ஈடுபாடு ஒரு புதுக் கருத்தை அளித்தது

காருக்கு (மேகத்திற்கு) உயிரூட்டுகிறார் புலவர். காரை மனிதனாக்குகிறார். அந்த மழையாகிய மனிதனைச் சிரிக்கவைக்கிறார். மனிதன் சிரித்தால் அவனுடைய பற்கள் தெரிய வேண்டுமே இதோ! முல்லை மலர்களை அந்த மனிதனுக்குரிய அழகிய பற்களாகப் படைத்துவிட்டார்.

"தோழி! என்னைப் பார்த்துக் கார் சிரிக்கிறது அந்த நீர் துளியைப் பெற்ற முல்லை அதற்குப் பற்களாக அமைந்துவிட்டனவே" என்று கூறுகிறாள் தலைவி.

"பெயல் புறந் தந்த
பூங்கொடி முல்லை
தொகு முகை
இலங்கெயி றாக
நகுமே தோழி
நறுந்தண் காரே"

என்றார் புலவர்.

அந்தச் சிரிப்பை வறிதே விட்டுவிட புலவர் விரும்பவில்லை. கார் சிரிப்பதோடு நில்லாது ஏதாவது குத்தலாகப் பேசவேண்டும் என்பது புலவர் விருப்பம்.

இதோ காரைப் பேச வைக்கிறார் புலவர். "இளமை நீர் மேல் குமிழி போன்றது அக்குமிழி நிலைக்கும் காலம் மிகச் சிறிது. இதை உன் தலைவன் உணரவில்லை இளமைக் காலத்தில் சுவைக்கவேண்டிய இன்பங்களை நுகர்ந்து இன்புற்றிருக்காது பொருளையே பொருளாக

Phone 55034 Tel. Enkayam

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

**பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்**

கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

எண்ணிச் சென்றுவிட்டான் இன்னும் திரும்பவில்லை. உன்னை மறந்தான். தான் செய்த உறுதியையும் மறந்தான் எங்கு இருக்கிறான் என்பதும் தெரியாது என்று சொல்லிக் கார் நகைக்கிறதாம்.

“இளமை பாரார்
வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரார் எவணரோ”

என்றிசைக்கிறார் புலவர்.

தலைவிக்குச் சினம் இப்போது தன்னை மறந்த தலைவன் மீது இல்லை. அவள் கோபம் அனைத்தும் முல்லை மலரின் மீது திரும்பியது. கார்ப்பருவத்தின் மீது பாய்ந்தது. ‘என் தலைவர் என்னைப் பிரிந்து சென்றார் அவர் காதலராகவே சென்றார்? உலகத்து இன்பம் பொருளின்றிக் கைகூடப் பெறாது என்ற எண்ணத்தாலன்றோ? இதை உணராது கார்ப்பருவம் வந்துவிட்டது எள்ளி நகையாடுகிறது அறிவில்லாதது; என் தலைவர் சொல் தவறார். அவர் வருமுன் ஏன் இந்தக் கார்ப்பருவம் வந்தது. அதுதான் அறிவில்லாதது என்றாலும் என்னுடைய வீட்டில் வளர்ந்த இந்த முல்லை அதோடு சேர்ந்துகொண்டு ஆடுகிறதே இதற்கு எவ்வளவு நெஞ்சழுத்தம்” என்ற பொருளெல்லாம் புலப்பட,

“பெயல் புறந்தந்த
பூங்கொடி முல்லை
தொகுமுகை இலங்கெயிறாக
நகுமே தோழி நறுந்தண் காரே”

என்றிசைக்கிறார்.

“நான் எனக்கு என் தாய் கொடுத்த பாலையெல்லாம் இந்தக் கொழுத்த முல்லை கொடிக்கல்லவா ஊட்டி வளர்த்தேன், ஐயோ! அந்த நாட்களை எல்லாம் இது மறந்ததே, நேற்று வந்த மழை அளித்த சிறு துளி நீரைப் பெற்று அதனுடன் கூடிக் குலவுகின்றதே; என்னை எள்ளி நகையாட அதற்குப் பற்களாய் அதன் பூக்கள் அமைந்துவிட்டனவே. நன்றி கெட்ட முல்லை” என்று தலைவி கூறுவதும் இவ்வடிகளைப் படிக்கும்போது நம் காதில் விழுகின்றது.

“தலைவி! உன்னுடைய காதலன் அறிவில்லாதவன். உன்னைப் பிரிந்தான்; மறந்தான்; திரும்பவில்லை. எங்கிருக்கிறான் என்பதும் உனக்குத் தெரியாது. உன்னுடைய வீடன்றி வேறு இடங்களை அறியாதவள் நீ; உன்னால் அவன் உள்ள இடத்தை எங்ஙனம் அறிந்துகொள்ள முடியும்? நான்- மேகமாகிய நான்- வானத்திலே எப்பொழுதும் உலவிக்கொண்டிருக்கிற நான் செல்லாத இடமுண்டோ? அறியாத ஊருமுண்டோ? நானும் பார்க்கமுடியாத வண்ணம் உன் தலைவன் எந்த ஊருக்குப் போயிருக்க முடியும்’ என்று கார் கூறுவது போல்,

“இவணும் வாரார் எவணரோ வென” என்னும் அடி அமைந்து தலைவியின் உள்ளத்தில் போச்சத்தை எழுப்புவதையும் நம்மால் உணர முடிகிறது.

“கேள் தோழி, கார் கேட்பதைப் பார் தோழி! என்னுடைய தோட்டத்தில் வளர்ந்த முல்லைக் கொடிக் கொத்துகளைத் தன் பற்களாகக் கொண்டு கார் சிரிப்பதை!” என்று இரங்கத்தக்க குரலில் கேட்கிறாள் தலைவி.

புலவர் கேட்டது ஒரே ஒரு செய்திதான். தலைவன் வரவில்லை என்பதே அது. அவர் பார்த்தது ஒரே ஒரு காட்சிதான். முல்லை கொத்துக் கொத்தாகப் பூத்துக் கிடந்தது என்பதே அது. இவ்விரண்டையும் இணைத்து அவர் தந்த பாட்டோ தலைவியின் அப்போதைய வாழ்க்கை நிலையையே ஓவியமாகத் தீட்டிக் காட்டிவிட்டது. அதோ தலைவி இரங்கத்தக்கவளாகத் தன் தோழியுடன் நிற்கிறாள். அவளெதிரே முல்லைப் பூக்கள் ஆடிக்கொண்டிருக்கின்றன. தலைவனைப் பிரிந்து வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும் தலைவியின் வருத்தத்தை மிகுதிப்படுத்துகின்ற வகையில் முல்லை அமைந்தது. புலவர் தலைவியின் உள்ளத்தை உள்ளவாறு தாம் உணர்ந்தார். தாமே அத் தலைவியானார். நம்மை அவருடைய தோழியாக மாற்றினார்; செய்தி கூறினார். நாமும் கேட்டோம். அவ்வருத்தத்தை உணர்கிறோம். தலைவி கொண்ட வருத்தத்திற்கும் அவ் வருத்தத்தை அவள் தோழிக்குக் கூறும்போது அதன் காரணமாகத் தோழி கொள்ளும் வருத்தத்துக்கும் உள்ள தன்மையே புலவருக்கும் சுவைஞனுக்கும் (ரசிகன்) இடையே இருக்கும். இதுவே கலைஞனுடைய திறமையாகும்.

தீட்டுகின்ற ஓவியன் உணர்ந்தவைகளையெல்லாம் சுவைக்கின்றவன் பெறுமாறு ஓவியம் அடையுமாயின் அதுவே கலையாகும். அத்தகைய உணர்ச்சியை ஊட்ட வல்ல பாட்டே அந்த ‘ஒரு பாட்டு’ ஆகும்.

இதோ அந்தப் பாட்டு; சுவைத்து இன்புறுங்கள்!

“இளமை பாரார்
வளநசைஇச் சென்றோர்
இவணும் வாரா
ரெவணரோ வெனப்
பெயல்புறந் தந்த
பூங்கொடி முல்லைத்
தொகு முகை
இலங்கெயி றாக
நகுமே தோழி
நறுந்தண் காரே.”

[குறுந் தொகை, 126]

# தில்லைக் கூத்தன்

தில்லைக்கூத்தன் திருக்குடமுழுக்கைச் சென்ற 7-7-1955 வியாழக்கிழமை பல லக்ஷக் கணக்கான மக்கள் தரிசனம் செய்து, பிறவிப் பெரும்பயன் பெற்றார்கள். தொடர்ச்சியாக நடைபெற்ற பல சொற்பொழிவுகள் மூலம் அவன் அளவிலாப் பெருமையைச் செவிக்கின்னமுதாக நுகர்ந்தார்கள்.... பொதுவாகத் தில்லைத் தலத்தின் சிறப்பைப் பற்றியும், தில்லைக் கூத்தன் கருணைத் திருவிளையாடல்களைப் பற்றியும் சுருக்கமாக எழுதி.... இக் குடமுழுக்கு விழாவிற் கலந்து கொள்கின்றதும் பொருத்தமேயாகும்.

தேவாரப் பாடல்பெற்ற திருத்தலங்கள் 274-னுள் முதன்மைத் தானம் தில்லைக்கே உரியது. பழைய வரலாறுகள் சோழநாட்டுத் தலங்களையே முதலில் தொடங்கிக் காவிரிக்கு வடகரைத் தலங்களுள் ஒன்றாகிய தில்லையைப் பற்றியே ஆரம்பம்செய்யும். தேவார பரிபாஷையில் "கோயில்" என்பது தில்லையைக் குறிக்கும். உலகத்திலுள்ள ஏனைய ஆலயங்கட்கெல்லாம் கோயில் எனும் பெயர் வழங்குவது உபசாரமேயாகும். அண்ட சராசரங்கள் அனைத்திற்கும் "கோ" (அரசன்) ஆக ஆணை செலுத்துபவன் தில்லைக்கூத்தனே ஆவான். ஏனைய கடவுளர் எல்லாம் அவன் ஏவிய வழித், தத்தம் தொழில் புரிவர். தில்லைக் கூத்தன் திருநடனம் ஆதியும் அந்தமும் இல்லாது என்றும் நடைபெறும். அவனுடைய ஆட்டம் நின்றால், உலகங்களும் உயிர்களும் இயங்காமல் மாய்ந்து போம். திருமூலர் திருமந்திரத்தில் இதைப் பல பாடல்களில் மிக நன்றாக விளக்குகிறார். "எங்கும் சிதம்பரம் எங்கும் திருநட்டம்" முதலியன காண்க. ஒவ்வொரு மனிதனுடைய இருதயத் துடிப்பினும் அவனுடைய திருக்கூத்து நிகழ்கின்றது ஒவ்வோர் அணுவிலும் அவன் திருக்கூத்து நிகழ்வதைப் பரமாணு பற்றிய ஆராய்ச்சி துலக்குகின்றது. விண்ணிற் பொலிகின்ற கதிரவன் முதலிய எல்லாப் பொருள்களிலும் அவனுடைய திருக்கூத்தே விளங்குகின்றது. ஐம்பெரும் பூதங்களிலும் சூரியன் சந்திரன் ஆன்மா ஆகிய மூன்றிலும் அவன் இயங்குவதையே சாத்திர பரிபாஷையில் "அஷ்ட மூர்த்தம்" என்று சொல்வது மரபு.

இவ்வாறு எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இயக்கத்தைப் பழைய தமிழ் மக்கள் வழிபட்டனர். அவ் வழிபாட்டிற்கு இடமும் பொருளும் இன்றியமையாதன; ஆகையால் தில்லை அம்பலத்தையும், திருக்கூத்தனையும் உருவகமாகக் கொண்டனர். கோயில் வழிபாட்டு முறையில் சைவர்கள் பஞ்சபூத ஸ்தலங்களைக் கொள்வதுண்டு. பிருதிவி தலமாகக் கக்சி ஏகம்பத்தையும் ஆரூரையும், அப்புத் தலமாக ஆனைக்காவையும், தேயுத்தலமாக அண்ணாமலையையும், வாயுத்தலமாகக் காளத்தியையும் ஆகாயத் தலமாகத் தில்லைத் திருச்சிற்றம்பலத்தையும் கொள்வது மரபு. இங்கு ஆகாயம் என்பது, நீல வானத்தையன்று, எல்லாவிடத்திலும் நிறைந்து ஒலி, ஒளி முதலியவைகளைத் தனது சிற்றலை, போல வழியாகப் பரப்புகின்ற 'Ether" என்னும் பொருளையே குறிக்கும். இதை வெளி என்றும் கூறுவதுண்டு.

இனி, தில்லைத்தலத்தின்பழைய வரலாறுகளைச் சிறிது காணலாம். பல ஆயிர ஆண்டுகளுக்கு முன் இது, தில்லை மரங்கள் நிறைந்த வனமாய் இருந்தது. புலிக்கால் முனிவர் (வியாக்ர பாதர்) இவ்வனத்தில் தவம் புரிந்து சிவபூஜை செய்திருந்தார். பின்பு இரணியவர்மன் திருக்கோயில் கட்டிய வரலாற்றை உமாபதி சிவனார் அருளிச்செய்த "கோயிற்புராணம்" அழகாக விரிக்கின்றது. முதன் முதலாக மிகச் சிறிய அளவில் இருந்த இக்கோயில், பற்பல மன்னர்களின் வள்ளன்மையாலும் பக்திப் பெருக்காலும் இப்போதுள்ள பெருநிலையை யடைந்துள்ளது. தில்லைக் கூத்தன் காட்சி வழங்கும் மிகச் சிறியஇடத்திற்குச் 'சிற்றம்பலம்' அல்லது 'சிற்சபை' என்று பெயர். இதையே கல்வெட்டுக்கள் வடமொழியில் 'தப்ர சபா' (Dhabra sabha) என்று குறிக்கின்றன. நாளடைவில் சிற்சபை என்பது சித்சபை என்றுமாறிச் சிதம்பரம் எனப் பெற்றுச் சிதாகாசப் பெருவெளியைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டது. தில்லைக்கூத்தன் வலப் புறத்தில் ஆகாய வழிபாட்டைக் குறிக்கும் முறையில் பொன்னாலாகிய பல வில்வமாலைகள் தொங்கவிடப்பட்டு, ஒரு திரைபோட்டுச் "சிதம்பர ரகசியம்" என்று பெயர் வழங்கப்பட்டுள்ளது. திருச்சிற்றம்பலத்தின் மேலுள்ள ஸ்தூபி ஏனைய தலங்களில் உள்ளதுபோல் இராமல் சாதாரண வீடுகளுக்கு மேலுள்ள கூரைபோன்றுள்ளது. இவ்

வாறே சோநாட்டுத் தலங்களிலும் உள்ளது; திருச்சிற்றம்பலத்தின்மேற்கூரை 21600 தங்க ஓடுகளால் ஆகியது. பல கல்வெட்டுக்களில் சோழ மன்னர்கள் அவ்வப்போது இந்த ஸ்தூபிக்குப் பொன்வேய்ந்தமைபுகழப்படுகின்றது. ஒரு நிமிஷத்திற்குப் பதினைந்து (15) மூச்சு விதமாக 24 மணி நேரம் கொண்ட ஒரு நாளில் ஒரு மனிதன் 21600 மூச்சு விடுகின்றான். தங்க ஓடுகளின் மொத்த எண்ணிக்கை இஃதேயாகை, சிற்றம்பலத்தின் உள்ளிருப்பவன் உயிருக்குயிராய், இதயவெளியில் நட்டம் புரிபவன் என்ற தத்துவ உட்கருத்தைப் புலப்படுக்கின்றது. சிற்சபையின் மேலுள்ள கலசங்களின் எண்ணிக்கை, கனகசபையிலுள்ள தூண்களின் எண்ணிக்கை, கீழே பரவியிருக்கும் கற்களின் எண்ணிக்கை முதலியவற்றிற்கும் பல தத்துவார்த்தங்கள் கூறப்படுவதுண்டு. கனகசபையிலிருந்து சிற்சபைக்கு ஏறுவதற்கு ஐந்து படிகள் உண்டு. இவைகட்குப் "பஞ்சாக்ஷரப் படிகள்" என்று பெயர். பஞ்சாக்ஷர ஜபத்தின் வழியாக ஏறி இறைவனை அடையலாம் என்பது கருத்து. படிகளின் இருபுறமும் யானை உருவங்கள் உள்ளன. சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் ஒன்றாகிய "திருக்களிற்றுப்படியார்" எனும் சுவடியை இப் படிகள் ஒன்றன்மேல் வைத்த போது இப் படியின் உருவத்துள் உள்ள யானைகளுள் ஒன்று, தனது தும்பிக்கையால் இந்தச் சுவடியைத் தில்லைக் கூத்தன் திருவடியில் தூக்கி வைத்தபடியால் இந் நூலுக்கு இப் பெயர் ஏற்பட்டது. பல சோழ மன்னர்களின் மகுடாபிஷேகம் அவர்களை இப் பஞ்சாக்ஷரப்படியில் தில்லைக் கூத்தன் திருமுன்பு அமர வைத்து நடைபெற்றது. (இத்தகைய சிறப்புக்கள் பெற்ற இப் பஞ்சாக்ஷரப்படிக்கு எனது நெருங்கிய உறவினர்களாகிய மணலி சின்னையா முதலியார் குடும்பத்தினர் அவ்வப்போது வெள்ளித்தகடுகளைப்புதுப்பித்துச் சார்த்தி வருகின்றனர்) திருமால் பிரமன் முதலியோர் இசைக் கருவிகளை ஒலிக்க, தேவர்களும் முனிவர்களும் மக்களும் காண, கூத்தப்பிரான் என்றென்றும் திருநடனம் புரிகின்றான் ஏனையோர் கூத்தாடுதற்கு நட்டுவனார் இயக்குவித்தல் வேண்டும். தில்லைக் கூத்தன் அவ்வாறின்றி, ஒருவர் இயக்குவிக்காமல், தானே பிறரை இயக்குவிக்கும் முறையில் நடம் புரிகின்றான் என்பதைத் துறை மங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அழகாகக் கூறுகின்றார்.

தில்லைக் கூத்தன் திருநடனம் ஐம்பெரும் தொழில்களை (ஆக்கல், அளித்தல், அழித்தல் மறைத்தல், அருளல் என்பவற்றைக்) குறிக்கும். அம்மை சிவகாமசுந்தரி இத்திருநடனத்தை இடைவிடாது தரிசிக்கின்றாள். "கண்டங் கரியான் கருணைத் திருவுருக்கொண்டங்கு உமை காணக் கூத்துகந்தானே" என்றார் திருமூலர். "பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென நோயுண் மருந்து தாயுண்டாங்கு" நமது பிறவிப் பிணி போக்கவே, நம் பொருட்டு அம்மை தரிசித்து, தரிசனப் பலனை நமக்குத் தருகிறாள் என்பர் குமரகுருபர அடிகள். கோடி சூரியபிரகாசமுள்ள அத் திருநடனத்தை, நம் ஊனக்கண் கொண்டு பார்க்கவே முடியாது.

தில்லையின் பெருமையைத் திருமுறைகள் மிக நன்றாக விளக்குகின்றன. திருஞானசம்பந்தர் பல பாசுரங்களால் அனுபவிப்பதைக் காணலாம். கற்று ஆங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பலம், செல்வ நெடுமாடம் சென்று சேண் ஓங்கிச் செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம், மறையோர் தில்லை நல்லவர் பிரியாத சிற்றம்பலம், சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலம், ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறை தில்லை தன்னுள் ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலம் முதலிய சொற்றொடர்களைக் காண்க. திருநாவுக்கரசரும், வையந்தனில் மிக்க மல்கு சிற்றம்பலம், தினைத்தனை வேதம் குன்றாத் தில்லைச் சிற்றம்பலம், இணையடிகள் தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலம், அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்; செய்ய மாதுறை சிற்றம்பலம், தூய செம்பொன்னினால் எழுதி மேய்ந்த சிற்றம்பலம் என்று கூறுவன காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகளும் பல்லவர்க்குத் திறைகொடாத மன்னவரை மறுக்கம் செய்யும் பெருமையார் சிற்றம்பலம், முட்டாதே முச்சந்தி மூவாயிரவர் சிற்றம்பலம் என்பன காண்க.

இம்மட்டில் தலப்பெருமையை நிறுத்தி இனிக் கூத்தப்பிரான் பெருமையைப் பற்றிய சிலவற்றைக் காண்போம். அவன் திருநடனத்தில் ஐம்பெரும் தொழில்கள் குறிக்கப்படுவதைத் "தோற்றம் துடியதனில்" எனும் செய்செய்யுள் கூறும். அத் திருவுருவத்தில் ஐந்தெழுத்து அமைந்திருத்தலையும் சில செய்யுள்கள் கூறுகின்றன. சாத்திரக் கருத்துக்கள் ஒரு புறம் இருக்க,

அவனுடைய திருவுருவத்தின் பேரழகுக் கவர்ச்சியை அப்பர் சுவாமிகள் நன்றாக அனுபவிக்கிறார். "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்....எடுத்த பொற்பாதமும் காணப் பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே". "என்றுவந்தாய் எனும் எம்பெருமான் தன் திருக்குறிப்பே "சிற்றம்பலவன்" சிரித்த முகங்கண்ட கண்கொண்டு மற்றினிக் காண்பதென்னே" என்பன காண்க. இந்தப் பேரழகையும் கவர்ச்சியையும் இன்று தரிசிப்பவர்களும் அனுபவிக்கலாம். திருவிசைப்பா ஆசிரியர்களும் கூத்தப்பிரான் பூதாதிகேச அனுபவத்தை 12—22, 215—225 எண்ணுள்ள திருவிசைப்பாப் பாடல்களில குறித்துள்ளனர்.

இம்மட்டில் இதை நிறுத்தி, தில்லைக் கூத்தன் கருணைத் திருவிளையாடல்கள் சிலவற்றைக் காணலாம். காமதேனுவின் பால் குடித்து வளர்ந்த உபமன்யு, பாலுக்கு வேண்டியழுதிட அப்பாலகனுக்குப் பாற்கடல் ஈந்தான் சிற்றம்பலவன். பாற்கடல் வற்றிற்று. ஆதிசேடனும் பதஞ்சலியாக வந்து கூத்தப்பிரானை வழிபட்டான். பாற்கடலையும் ஆதிசேடனையும் இழந்த திருமாலும் தில்லைக்கே வந்து இந்தத் திருநடனம் காண்கின்றார். இப் பாற்கடலுண்ட உபமன்யு முனிவரே, கண்ணபிரானுக்குத் திருவடித் தீக்ஷையும், பஞ்சாக்கர உபதேசமும் செய்து கயிலையில் முனி கணங்கட்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றை உரைத்தார். கூத்தப்பிரான் தனது வலக்கை உடுக்கையை ஒலித்துப் பதினான்கு ஒலிகளை எழுப்பி, அவைகளைக் கொண்டு பதஞ்சலியை மகாபாஷ்யம் எழுதுமாறு செய்தான். இவரை மன்று தொழுத பதஞ்சலி என்று திருமூலர் புகழ்கின்றார். யோக நெறியில் வழிபடுவோர்க்குக் கூத்தன் சிலம்பொலி கேட்கும். சேரமான் நாயனார், பெருமான் வழிபாட்டில் சிலம்பொலி கேட்கத் தாமதம் ஏற்பட்ட காரணங்கொண்டே, அவருக்கு நம்பியாரூரர் தோழமையைத் தந்ததும் கூத்தப்பிரானே. திருநீலகண்டத்துக் குயவனார்க்கு இளமை அளித்ததும் அவன் திருவிளையாடலே. கணம்புல்ல நாயனார், கூற்றுவ நாயனார், கோச்செங்கட் சோழ நாயனார் முதலியோருக்கும் அவனே முத்தியளித்தான். திருநாளைப் போவாரையும் தில்லைக் கழைத்துத் தீக்குளிக்கச்செய்து, மாமறை முனிவராக்கி அனைவர் கண்ணுக்கெதிரிலும் தனது திருவடியில் மறைந்து முத்தியடையும்படி யருளினான். திருவாதவூராருக்கு அருள் புரிந்து, ஈழநாட்டுப் புத்தர்களை வாதில் வென்று ஊமைப் பெண்ணைப் பேசவைத்துத் திருச்சாழல் பாசுரங்கள் பெற்றான். "பாவை பாடிய வாயால் கோவை பாடு" என்று வேண்டி, திருவெம்பாவை அருளிய அவரைக் கொண்டு திருச்சிற்றம்பலக் கோவை நானூறு பாடல்களையும் அவர் பாடும் போது தானே ஏடும் எழுத்தாணியும் கொண்டெழுதி, இறுதியில் "வாதவூர்ச் சிவபாத்தியன் சொல்ல அழகிய சிற்றம்பலவன் எழுதியது" என்று கைச்சாத்திட்டுச் சிற்சபையில் வைத்தான். தில்லை மூவாயிரவர் இச்சுவடியைக் கண்டெடுத்து, வாதவூராரைத் திருச்சிற்றம்பலத்திற்கு அழைத்து, இச் சுவடியில் உள்ள பாடல்களின் பொருள் என்னவென்று வினவ, அவர் தன்னைச் சுட்டிக் காட்டி, அனைவரும் அவன் திருவுருவைக் காணும் ஒரு கணத்திற்குள், தனது தூல உடலைச் சூக்குமத்திலும், சூக்கும உடலை அவன் திருவடியிலும் ஒடுக்கி மறைத்தருளினார்.

முதல் இராஜராஜ சோழன் எனும் திருமுறைகண்ட சோழன் பக்திக்கிரங்கி, நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு திருமுறைகள் சேமிக்கப் பெற்றிருந்த அறையைத் திறப்பித்து அவைகளை வெளிப்படுத்தியதும் தில்லைக் கூத்தன் திருவிளையாடலே; சேக்கிழார் பெருமானுக்கு 'உலகெலாம்" என்று அடியெடுத்துக் கொடுத்துத் திருத்தொண்டர்புராணத்தைத் தொடங்கித் தில்லையிலேயே இருந்து ஓராண்டில் எழுதி முடிக்கச் செய்து சைவம் வளர்த்ததும் கூத்தப்பிரான் அருஞ் செயலேயாகும். ஒரு விழாவில் திருத்தேர் ஓடாது தடைப்பட, சேந்தனார் நிவேதித்த களியமுதை உண்டு அவர் திருப்பல்லாண்டு பாடிய பிறகு தேரை ஓடவைத்ததும் அவன் கருணைச் செயலே; தில்லைவாழ் அந்தணர்கட்கு உமாபதி சிவனார் பெருமையை உணர்த்த வேண்டி, ஒரு விழாவில் திருக்கொடியேற்றமாகாதபோது அவ் வுமாபதி சிவனாரைக் கொண்டு "கோடிக் கவி" பாடவைத்துக் கொடியேற்றம் நிகழச் செய்தான். அவருக்குக் கைச்சீட்டெழுதி யனுப்பிப் 'பெற்றான் சாம்பான்' எனும் ஆதித்திராவிடத் தொண்டனுக்கும், முள்ளிச் செடிக்கும் முத்தியளிப்பித்தான். கூத்தப்பிரான் பெருமை கருணை முதலியவற்றை அளந்தறிதல் மன்னுயிர்க்கருமையாதலின் இம்மட்டில் முடித்தல் சாலும். எல்லா ஆலயங்களிலுமுள்ள மூலத்தான சிவலிங்கங்களின் கலைகள் எல்

## குருகுலத்தில்
# படத் திறப்பு

'திரு அரசிலி' என்னும் பாடல் பெற்ற தலத்தின் அருகில் உள்ள காட்டாண்பாக்கத்தில், அருள் நேயம் அடியார் நேயம் மிகுந்து திருமுறை திருவருட்பாப் பாராயணங்களோடும் வழிபாடுகளோடும் வள்ளன்மையோடும் பெருவாழ்வு வாழ்ந்து வரும் திருமிகு வரதாரெட்டியார் ஜெயலக்ஷ்மி அம்மையார் என்னும் இல்வாழ்க்கையர் திருவுருவங்கள் எண்ணெய்ப் பூச்சில் எழுதிய பெரும் படம் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்களால் 25–6–55-ல் திறந்து வைக்கப்பெற்றது.

அம்மையாரவர்களும் அவர்கள் தலைவர் ரெட்டியாரவர்களும் மாம்பாக்கம் குருகுலத்தின்பால் பேரன்பு மிக்கவர்கள். குருகுலத்தின் ஆட்சிக் குழுவினர். குருகுலத்தில் முறையே 'நீத்தார் பெருமை' 'விருந்தோம்பல்' என்னும் இரண்டு திருக்குறள் அதிகாரங்களைச் செயல் செய்பவர்கள். எப்போதும் உருவான நற்செயலில் கருத்து மிக்கவர்கள்!

வாரியாரவர்கள் இவர்கள் பெருமைகளை நன்கு விரித்துரைத்தார்கள்; மதுரை ஆதீன சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், மாலைகள் அணிவித்து ஆசி வழங்கினார்கள்; பல்லாயிரக் கணக்கில் அன்பர்கள், தம் கண்ணும் கருத்தும் களிப்ப வியந்து அன்புமழை பொழிந்து பெருமகிழ்ச்சியில் திளைத்தனர்.

---

லாம் இத்தலத்துள்ள மூலத்தான லிங்கத்துள் அர்த்தசாம பூசை முடிந்தவுடன் வந்து ஒடுங்குவதால், இம் மூர்த்திக்குத் திருமூலட்டான நாதர் என்றே பெயர். தில்லைக் கூத்தன் திருவருள் என்றும் இன்பம் பெருக்கும் இயல்பினால் நன்மை என்றும் நிலவி உலகெலாம் இருக்கச் செய்க. தில்லைக் கூத்தன் திருவடி வாழ்க.

—சித்தாந்தம்.

# வாழ்த்து

பூமலி சோலைப் புதுநற வொழுக்கித்
தேமலி சாலிச் செழுமடை யுடைக்குந்
துழனியும் அளறுடைக் கழனியே ரோட்டும்
உழவரின் பாடல்கேட் டுவக்கும் ஓசையும்
விண்மூ லந்தான் வெருவக் கடுவனை
மண்மூ லந்தா வென்னும் வானரங்
குதிசெய் தாடற் குலவும் வளமும்
நதிவிளை யாடும் நாரியர் நான
மணங்கமழ் நீரில் மரைப்பொகுட் டெகினக்
கணங்கள் பேடுடன் கலவியின் களிப்பும்
இத்தகை வளங்கள் இறும்பூ தளிக்கும்
மைத்தலை யுறங்கு மாடமே னிலையில்
விண்ணர மகளிரை விருந்திற் கழைக்கும்
பண்மொழி மாதர் பயின்மாம் பாக்கம்
குருகுலக் குரவ! கூறுநல் வாழ்த்து:
பெருந்தகை சைவப் பெரும்போ சிரிய!
தோன்றிற் புகழொடு தோன்றுக என்ற
ஆன்றவர் மொழிக்கே அணிகல மானோய்!
தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத் தாற்கா ணப்படு மென்ற
செந்நாப் போதார் செந்தமிழ் மறையால்
உன்னிரு குரவர் உயர்தவம் ஓர்ந்தேன்,
தந்தைதம் மைந்தர்க் காற்றிடும் உதவி
முந்தவை யிருப்பச் செயலென முன்னும்
மைந்தர்தந் தைக்காற் றுதவி மற்றிவன்
தந்தையென் னோற்றான் தவந்தா னெனவும்
ஆன்றவர் மொழியுஞ் சான்றும் உனக்கே;
ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் பெருந்திரு வென்று
பேசிய படியுன் எசில் பொருளே
இலனென லெவ்வம் இயம்பா தீதல்
குலனுடைய யான்கண் எனக்கூ றற்கும்,
ஆற்றுப் பெருக்கற் றடிசுடு நாளும்
ஊற்றுப் பெருக்கா லுலகூட் டுமெனும்
ஔவையெம் அன்னை அமுதமென் மொழிக்குஞ்
செம்மைகொள் இலக்கியச் சேக்கிழார் மரபோய்!
மணத்தினி லுமையாள், மகப்பெறற் கருதி
எணத்தகும் அழகி லெழிற்றம யந்தி
கற்பினிற் சனகி காதலுன் மனைவி
பொற்புடை மக்களு மைந்தரு நீயும்
என்னுயிர்த் துணையே கம்பர்கா மாட்சி
தந்திரு வருளாற் றூலமே லென்றும்
வாழி வாழி வளத்துடன்
ஊழி ஊழி உவந்துவா ழியவே.

—போன். கு.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)